©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ.1.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 25]

சென்னை, புதன்கிழமை, ஜூன் 22, 2016
ஆனி 8, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை**

***அறிவிக்கை***

*அரசாணை (நிலை) எண் 55 சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள் (FR5) துறை, 23–5–2016.*

(“தமிழ்நாடு மாநில நன்செய் நில அதிகார மன்றம்’’ ஏற்படுத்துதல்)

தமிழ்நாடு, குடிநீர் தேவை, பாசன தேவைகளை நிறைவேற்றுவதற்கும் அதன் உயிரின வாழ்க்கைச்சூழல் செயல்பாடுகளை பாதுகாப்பதற்கும் நன்செய் நில பாதுகாப்பின்மீது கவனம் செலுத்தி வரலாற்று சிறப்புமிக்க பண்பாட்டு பாரம்பரியங்களை கொண்டிருப்பதாலும்;

நன்செய் நிலங்கள், நிலத்தடி நீர் ஆதாரமாகவும், நீர் நிருவாகத்தை முறைப்படுத்தி, கழிவுநீர் சுத்திகரிப்பிற்கான இடவசதியை ஏற்படுத்தி, வெள்ளத்தை தணிப்பதில் உதவி செய்து, காற்றின் தரத்தை தூய்மைப்படுத்துகிற வகையில் செயலாற்றி, வளமான பல்வகை உயிரின பெருக்கத்திற்கு இடமளித்து மாபெரும் உயிரின வாழ்க்கைச்சூழல் முக்கியத்துவத்தை பெற்றுள்ளதாலும்;

வளர்ச்சி தொடர்பான செயல்பாடுகள் நன்செய் நிலங்கள் மீதான அவசரத்தேவையை அதிகரிப்பதுடன் பல நன்செய்நிலங்களின் நீடித்த தன்மையை, தூய்மைக்கேடு பாதிப்பதாலும்;

தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த அணுகுமுறை ஒன்றின்வாயிலாக, நன்செய் நிலங்களை பாதுகாப்பதற்கு சீரிய முயற்சிகள் இன்றியமையாதவையாக இருப்பதாலும்;

எனவே, நன்செய் நிலங்களின் அறிவார்ந்த பயனை உறுதி செய்யும் பொருட்டு, மாநிலத்தில் நன்செய் நிலங்களின் மேலாண்மை தொடர்பாக நெறிப்படுத்தி ஆலோசனை வழங்கி, கண்காணித்து, முறைப்படுத்துவதற்காக தமிழ்நாடு மாநிலத்தில் மாநில நன்செய் நில அதிகார மன்றம் ஒன்றை ஏற்படுத்துவது அவசியமானதாக ஆகியுள்ளதாலும்;

எனவே தற்போது, மாநில அரசு, பின்வரும் நபர்கள் கொண்ட தமிழ்நாடு நன்செய் நில அதிகார மன்றத்தை இதனால் ஏற்படுத்துகிறது.

| *தொடர் எண்* | *மாநில நன்செய் நில அதிகார மன்றத்தின் உறுப்பினர்கள்* | *பதவிப்பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | அரசு முதன்மைச் செயலாளர் | தலைவர் |
| 2. | அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5 | உறுப்பினர் |
| 3. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/கூடுதல் முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 4. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை | உறுப்பினர் |



DTP-II-2-(25) (T Sup)—1

| தொடர் எண் | மாநில நன்செய் நில அதிகார மன்றத்தின் உறுப்பினர்கள் | பதவிப்பெயர் |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 5. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், பொதுப்பணித்துறை | உறுப்பினர் |
| 6. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை | உறுப்பினர் |
| 7. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், வேளாண்மைத்துறை | உறுப்பினர் |
| 8. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை | உறுப்பினர் |
| 9. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், சுற்றுலா மற்றும் இந்து சமய அறநிலையங்கள் துறை | உறுப்பினர் |
| 10. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/அரசு கூடுதல் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | உறுப்பினர் |
| 11. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/கூடுதல் முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை | உறுப்பினர் |
| 12. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/கூடுதல் முதன்மைச் செயலாளர், வருவாய்த்துறை | உறுப்பினர் |
| 13. | செயலாளர்/முதன்மைச் செயலாளர்/கூடுதல் முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | உறுப்பினர் |
| 14. | தலைவர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் | உறுப்பினர் |
| 15. | முதன்மை தலைமை, வனப் பாதுகாவலர் | உறுப்பினர் |
| 16. | முதன்மை தலைமை, வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன விலங்குகள் காப்பாளர் | உறுப்பினர் |
| 17. | இயக்குநர், சுற்றுச்சூழல் துறை | உறுப்பினர் |
| 18. | உறுப்பினர் செயலாளர், தமிழ்நாடு பல்வகை உயிரினப்பெருக்க வாரியம் | உறுப்பினர் |
| 19. | சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் நன்செய் நில கோட்ட இயக்குநர் அல்லது மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனங்கள் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகத்தின் பிரதிநிதி ஒருவர் | உறுப்பினர் |
| 20. | முதன்மைப் பொறியாளர், (நீர் வள ஆதாரங்கள் துறை) பொதுப்பணித்துறை, சேப்பாக்கம் | உறுப்பினர் |
| 21. | கரையோர கடல், நன்னீர், சதுப்பு தாழ்நிலம், சதுப்பு நிலம், உயிரின வாழ்க்கைச்சூழல் ஏற்பாட்டு முறை நீரழுத்தவியல் பல்வகை உயிரினத்தொகுதி முதலிய துறைகளின் மூன்று வல்லுநர்கள் | |
| | (அ) இணைத் திட்ட இயக்குநர், தேசிய பெருங்கடல் தொழில் நுட்ப நிறுவனம், பள்ளிக்கரணை, சென்னை—600 100 | |

| *தொடர் எண்* | *மாநில நன்செய் நில அதிகார மன்றத்தின் உறுப்பினர்கள்* | *பதவிப்பெயர்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| (ஆ) | "D" வகை அறிவியலாளர் மற்றும் பொறுப்பு அலுவலர் இந்திய உயிரியல் ஆய்வு மையம், தெற்கு மண்டல நிலையம், 130, சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை—600 028, | உறுப்பினர்கள் |
| (இ) | இயக்குநர், நீர் நிறுவனம், காருண்யா பல்கலைக்கழகம், (பல் வகை உயிரினத்தொகுதி வல்லுநர்) கோயம்புத்தூர்—641 114 | |
| 22. | தலைமை வனப் பாதுகாவலர் | உறுப்பினர் செயலாளர் |

தமிழ்நாடு நன்செய் நிலம் அதிகார மன்றம், மத்திய நன்செய் நிலம் முறைப்படுத்தல் ஒழுங்குமுறை ஆணையம் கருதிப் பார்ப்பதற்காக அறிவியல் சார்ந்த மற்றும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட அளவுகோல்களின்படி, மாநிலத்திலுள்ள முன்னுரிமை வாய்ந்த நன்செய் நிலங்களை அடையாளம் கண்டறிந்து, தெரிவு செய்யும்.

தேவை ஏற்படுகிறபோது, மத்திய நன்செய் நில முறைப்படுத்தல் அதிகார மன்றத்திடம் அளிப்பதற்காக, தமிழ்நாட்டில் யாதொரு நன்செய் நிலத்தின் மேலாண்மைத் திட்டத்தை இறுதி செய்து ஒப்புதல் அளிப்பதற்கும், தமிழ்நாட்டில் அனைத்து நன்செய் நிலங்களை பாதுகாத்து மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒழுங்குமுறை மற்றும் கண்காணிப்பு மரபுகளை நடைமுறைப்படுத்துவதற்கும், மேற்சொன்ன அதிகார மன்றத்திற்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

மாநிலத்தில் நன்செய் நிலங்களின் தகுந்த மேலாண்மை மற்றும் அறிவார்ந்த பயன்பாடு தொடர்பான யாதொரு பொருண்மையில் உரிய முடிவினை எடுக்கும் பொறுப்பும் மேற்சொன்ன அதிகார மன்றத்திற்கு அளிக்கப்படுகிறது.

மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட அளவிலான நன்செய் நில மேலாண்மைக் குழுவை (DLWMC) ஏற்படுத்தி அதன் செயல்பாடுகளை நெறிப்படுத்தி கண்காணிப்பதற்கும் தமிழ்நாடு மாநில நன்செய் நில அதிகார மன்றத்திற்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

இந்த வல்லுநர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாக இருக்கும்.

இந்த வல்லுநர்களுக்கு, மாநில அரசின் முதல் வகுப்புக் குழு உறுப்பினர்களுக்கு இணையான பயணப்படிகளும் அகவிலைப்படிகளும் அளிக்கப்படும்.

இந்த அறிவிக்கை, வெளியிடப்படுகிற நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**ஹன்ஸ் ராஜ் வர்மா,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### ***அறிவிக்கை***

*[அரசாணை (நிலை) எண் 120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை 20—5—2016.]*

தமிழ்நாடு 1982—ஆம் ஆண்டு உடலுழைப்பு தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பை முறைப்படுத்தல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டத்தின் 6—ஆம் பிரிவின் உட்பிரிவுகள் 3 மற்றும் 5—ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 19—2—2014 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** சிறப்பு வெளியீட்டில் பாகம்—II-பிரிவு 2 பக்கம் எண் 1—இல் வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் II(2)/LE/207(C-1)/2014 ஆம் எண் அறிவிக்கையில் கீழ்க்கண்ட திருத்தங்களை இதனால் செய்கிறார்.

***திருத்தம்***

அரசின் பிரதிநிதிகள் A. என்ற தலைப்பின் கீழ் தொடர் எண் 7—க்குப் பிறகு பின்வருவனவற்றை சேர்க்க வேண்டும்.

**8.** தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர், சென்னை—600 014.

**9.** வட்டார தொழிலாளர் நல ஆணையர் (மத்திய), 3 ஆம் கட்டடத் தொகுதி, 5—ஆம் தளம், சாஸ்திரி பவன், எண் 24, ஹாடோஸ் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை—600 006.

**குமார் ஜெயந்த்,**
*அரசு முதன்மைச் செயலாளர்,*

(தமிழாக்கம்)

***ந. அருள்,***
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.